# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>

**<u>O.S.248/2012</u>**

2019ம் ஆண்டு ஜீன் மாதம் 26-ம் தேதி PW3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.என்.உமா மகேஸ்வரி, எம்.ஏ., எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **தங்கராஜ்** | **PW3** | ஜாதி |
| த/க. பெயர் | | | மதம் |
| கிராமம் | | | தொழில் |
| தாலுக்கா | | | வயது |
| மாவட்டம் | | | |

**முதல் விசாரணை ..**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு 3 வது சாட்சி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

நான் +2 வரை படித்துள்ளேன். யார், யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியும். சாந்தி என்பவரின் இடத்தை விற்பது சம்மந்தமாக நான் கையெழுத்து போட்டேன். மற்றபடி வாதி, பிரதிவாதி யார் என்பது எனக்குத் தெரியாது. வழக்கு சொத்து முகாசிப்பிடாரியூரில் உள்ளது. வா.சா.ஆ.2 ல் நான் சாட்சிக் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் நான்தான் சொன்னேன். வா.சா.ஆ.2 ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. உண்மையான ஆவணம். வாதி தங்கமுத்து எனது உறவினர் அல்ல. பழக்கம்தான். தங்கமுத்து எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் பொய்யானது என்பதால் எங்களுக்குள்ளேயே கையெழுத்து செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.

**3 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**